இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Register as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffana, Sri Lanka. Tel: 021 - 222 - 2378 Fax: 021 - 222 - 9041, ISSN 1391 - 7633

மலர் : 140
இதழ் : 20
பக்கங்கள் : 08
திகதி : 13.11.2016
விலை : 20.00

# யாழ் ஆயரின் நெடுந்தீவிற்கான விஜயம்





**யாழ்** மறைமாவட்டத்தின் அதிவந்தனைக்குரிய ஆயர் ஜஸ்ரீன் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது ஆயர் திருநிலைப்படுத்தலின் முதற் பயணமாக நெடுந்தீவிற்கான திருப்பயணத்தை 29.10.2016 அன்று மேற்கொண்டுள்ளார்.

இதன்போது நெடுந்தீவு கத்தோலிக்கத் திருச்சபையின் நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் 78 பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் திருவருட்சாதனமும் வழங்கி வைக்கப்பட்டது.

நெடுந்தீவு பங்கு மக்களால் ஆயர் அவர்களுக்கு பிரமாண்ட மானதோர் அழைப்பு நிகழ்வு நெடுந்தீவு பிரதேச செயலக முன்றலில் இருந்து புனித யுவானியார் ஆலயம் வரையில் இடம்பெற்றது. இதன்போது நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளீர் கல்லூரி மாணவிகளது பாண்ட் அணிவகுப்பும் ஏனைய பாடசாலை மாணவிகளது வரவேற்பு நடனங்களும் உறுதிப் பூசுதல் பெறும் மாணவர்களின் அணிவகுப்பும் இடம்பெற்றன.


அதனைத் தொடர்ந்து மாலை 05.00 மணியளவில் மறைமாவட்ட ஆயர் தலைமையில் ஆயரின் செயலாளர் மற்றும் பங்குத்தந்தை ஆகியோரால் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றப்பட்டு, 78 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

திருப்பலியை தொடர்ந்து ஆயர் அவர்களை பாராட்டும் முகமாக கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் உரை நிகழ்த்திய பங்கு மேய்ப்புப்பணிச் சபையினர் தமது பங்குத் திருச்சபையின் நிலைமைகள் மற்றும் தேவைப்பாடுகள் குறித்தும் ஆண்டகைக்கு தெரியப் படுத்தினர்.

அந்தவகையில் நெடுந்தீவு பங்கிற்கு உதவிப்பங்குத்தந்தை ஒருவரினது தேவை குறித்தும் இப்பங்கில் பணியாற்றும் 02 திருக்குடும்ப கன்னியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறும், ஒருசில ஆலயங்களின் பழமையை கருத்திற் கொண்டு அவை புனரமைக்கப்படவேண்டிய தேவைப்பாட்டையும், பங்கின் கல்வி மேம்பாட்டினை கருத்திற் கொண்டும் அதற்கான முயற்சிகளை முன்னெடுத்துவரும் பங்குத்தந்தை கன்னியர்களின

8ம் பக்.பார்....

## ஒருவருட நிறைவில் எமது யாழ் ஆயரை வாழ்த்துகின்றோம்



28.11.2016

குருமடத்தில் தொடங்கிய
இறை பணிப் பயணம்
குருவாக திருநிலை பெற்று
திருயேக இறைவனின்
அருள்பொழிவோடு
குருத்துவத்தின்
நிறைவினைக் கண்டு
யாழ் திருச்சபை
மந்தைகளின் ஆயனாய்
உருவெடுத்து
ஒருவருட நிறைவினைக்கண்ட
எம் ஆயர் **ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்** ஆண்டகை
தொடர்ந்தும் எம் திருமறை
ஒளிவிளக்காய் திகழ்ந்திட
வாழ்த்துகின்றோம்!
வாழ்க! பல்லாண்டு
நலமுடன்! இறைவன்
துணையுடன்!

# நம்பிக்கை வாயில்களாக மதங்கள் திகழட்டும் திருத்தந்தை பிரான்சிஸ்

இரக்கத்தின் சிறப்பு யூபிலியை ஒட்டி பிறரன்பு பணிகளில் குறிப்பாக இரக்கத்தின் பணிகளில் ஈடுபட்டிருக்கும் இந்து, கிறிஸ்தவ, புத்த, இஸ்லாமிய மதங்களைச் சேர்ந்த 200இற்கு அதிகமான உலகப் பிரதிநிதிகளை திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை இரக்கத்தை அடித்தளமாகக் கொண்டு இயங்கும் அனைத்து மதங்களும் ஒருங்கிணைந்து,

8ம் பக்.பார்....

## புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய பரிசளிப்பு விழா



**யா**/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா 11.11.2016 அன்று பாடசாலை அதிபர் அருட்சகோதரி M. மேரி றொசாந்தி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக உயர்திரு R. இரவீந்திரன், செயலாளர், வடக்கு மாகாணக்

8ம் பக்.பார்....

## மனித சமுதாயத்தின் திறந்தகாயம் மனித வர்த்தகம் - திருத்தந்தை பிரான்சிஸ்



**வ**ன்முறைகளால் துன்புறும் இவ்வுலகில், திறந்து கிடக்கும் பல்வேறு காயங்களுக்கு நல்ல சமாரியன் போல் மருந்திட, இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டில் நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன்னைச் சந்திக்க வந்திருந்த பன்னாட்டு துறவிகளுக்குக் கூறினார்.

மனித சமுதாயத்தில் திறந்து கிடக்கும் காயங்களில், சவால்கள் நிறைந்த காயம் மனித வர்த்தகம் என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை, ஒவ்வொரு மனிதருக்கும் உரிய அடிப்படை மாண்பு, இந்த வர்த்தகத்தால் அழிக்கப்படுகிறதென்றும், இந்தக் காயத்தை குணமாக்க, அரசுகள், பன்னாட்டு நிறுவனங்கள், சமுதாய அக்கறை கொண்ட குழுக்கள் இணைந்து வர வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்.

வெளிவந்துவிட்டது

மோட்சபாதை

பிரதி ஒன்றின் விலை: ரூபா. 650/=

தேவைப்படுவோர் புனித வளன் கத்தோலிக்க அச்சக விற்பனை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தொகையாகப் பெற விரும்புவோர் உங்கள் பங்குத் தந்தையூடாக முகாமையாளரைத் தொடர்பு கொள்ளவும்.



முகாமையாளர்,
புனித வளன் கத்தோலிக்க அச்சகம்,
யாழ்ப்பாணம்.

# மேய்ப்புப்பணி மாநாடு - யாழ் மறை மாவட்டம் - 2016

## திருகோணமலை மறைமாவட்டத்திலிருந்து அவதானிப்பாளர்களாகப் பங்கு பற்றியோரது அவதானங்களும் தீர்வுக்கான யோசனைகளும்

கடந்த 2016.09.29 - 2016.10.01 வரை யாழ் / புனித பத்திரிசியார் கல்லூரியில் நடைபெற்ற 'புதிதாய் வாழ்வோம்' என்ற தலைப்பில் ***"செயலற்ற விசுவாசம் உயிரற்றது"*** என்ற தொனிப் பொருளில் யாழ் மறைமாவட்ட மேய்ப்புப்பணிச்சபை மாநாட்டில் கலந்துகொண்டதன் அடிப்படையில் எமது அவதானங்களும் கலந்துரையாடப்பட்ட விடயங்களினூடே முகிழ்ந்த எழுவினைகளின் மீதான தீர்வுக்கான யோசனைகளையும் முன்வைப்பதில் பெருமகிழ்வடை கின்றோம்.

### *1.1. கருப்பொருளும் தலைப்பும்*

கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை விசுவாசம். அந்த விசுவாசமானது செயலற்றதாயின் அது உயிரற்றதாகி விடும் என்ற கருப்பொருள். முப்பது வருட போரியல் வாழ்வில் ஏற்பட்ட உடல், உள, ஆன்மீக வடுக்களை மீள ஆற்றுப்படுத்தி ஆசுவாசப்படுத்தும் நோக்கில் உறுத்தி உரத்து உணர்த்துவதாய் உள்ளது. குருக்கள், துறவிகள், பொது நிலையினரிடையே ஒரு சோகம், தொய்வு, பிடிப்பற்ற தன்மை நீங்கி **'புதிதாக வாழ்வோம்'** என்ற தலைப்பை அனைவரும் உணரும் வகையிலும் அனைவருக்கும் உணர்த்தும் வகையிலும் அமைந்துள்ளமை சிறப்பாகும்.

திருச்சபையானது **'ஒரு பராமரிக்கும் திருச்சபை'** யாக மட்டுமல்லமால் ஓர் உயிரோட்டமுள்ள திருச்சபையாக மாற வேண்டும் என்ற யாழ் மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் மூல நோக்கத்தை இம் மாநாடு வெற்றியடையச் செய்ய வேண்டும் என்பதே எமது வேணவா.

### *1.2. ஒழுங்கமைப்பு*

யாழ் மறைமாவட்ட இறை மக்களிடையே களநிலை ஆய்வு நடைபெற்றமையானது மாநாட்டிற்கான உள்ளீடுகளைக் கொடுத்துள்ளது. ஆன்மீக வறுமை நிலையை மூடி மறைக்காமல் ஆய்வு ரீதியாக உணரத் தலைப்பட்டது சிறப்பானதாகும். இந்த ஆய்வினூடாக மதத்தையும் வாழ்வையும் ஒன்றித்து நோக்கப்பட்டுள்ளது. நிலையறி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் பின்வரும் தலைப்புக்களில் நிலைப்பாட்டு ஏடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1. நாம் **இறைமக்கள் குழுமம்.**
2. நாம் **வழிபடும் குழுமம்.**
3. நாம் **சான்று பகரும் குழுமம்.**

இதன்வழி 22 வருடங்களின் பின் நடாத்தப்படும் மாநாட்டின் உயரிய எதிர்பார்ப்புக்கள், கனமான கருத்துப் பரிமாற்றங்கள், குழுநிலை ஆய்வு சமர்ப்பிப்புகள் என்பன **"மூடிக்கிடக்கும் திருச்சபையின் ஜன்னல்கள் திறந்து ஆரோக்கியமான காற்று உள்வர"** போதிய உதவி புரிந்திருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஓரளவு நிறைவேறியுள்ளது என்பதை உணர முடிந்தது.

### *1.3. மாநாட்டின் நோக்கங்கள்*

மாநாட்டின் நோக்கங்கள் மிகத்தெளிவான முறையில் உணரப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் மாநாடு நடத்தப்பட்டது என்ற ஒரே காரணத்தினால் தானியங்கியாக அருள் தரும் நிகழ்வாக மாநாடு மாறாது என்ற கரவையூர் செல்வம் அடிகளாரின் கருத்து உன்னிப்பாகவும் ஆழமாகவும் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். முன்வைப்புகள், குழுநிலை ஆய்வுகள், ஆய்வின் சமர்ப்பிப்புகள், கலந்துரையாடல்கள் என்பவற்றினூடாக முன்னுரிமைப் பணிகள் இனங்காணப்பட்டு அவை செயற்றிட்டங்களாக வகுக்கபட்டு நடைமுறைப்படுத்தப்படும்போதுதான் **'மூட்டை முடிச்சுகள்'** கழிக்கப்பட்டு சமத்துவமான, கூடிவாழும் சமூகமாக விசுவாசப் பயணத்தில் செயற்பாட்டுடன் கூடிய உயிரோட்டமான மறை மாவட்டமாக மிளிர முடியும் என்பது எமது கருத்தாகும்.

### *2. மாநாட்டின் மெச்சத்தக்க அம்சங்கள்*

1. நிலையறி ஆய்வு
2. ஆய்வினை அறிக்கையாக்கியமை
3. ஏனைய தமிழ் மறை மாவட்ட ஆயர்கள், அருட் தந்தைகள், பிரதிநிதிகள் உள்வாங்கப்பட்டமை
4. **'ஊர் கூட்டித் தேரிழுப்போம்'** என்ற கட்டுரை முன்கூட்டியே 'பாதுகாவலனில்' வெளிவந்தமை (மக்களுக்கு ஒரு முன்னூட்டலை ஏற்படுத்தியது)
5. அருட்திரு.எஸ்.ஜே.இம்மானுவேல் (ஜேர்மனி) அடிகளாரின் மாநாட்டை ஆயத்தப்படுத்துவதற்கான முற்சிந்தனைகள்.
6. உத்வேகத்தையும் உணர்வையும் தரும் மாநாட்டின் கீதம்
7. மண்டப ஒழுங்கு
8. கருத்துக்கள் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டமை
9. அறிவித்தலின் தெளிவு
10. சிநேகமான, சுமுகமான ஆரோக்கியமான புறச்சூழல், அகச் சூழல் நிலவியமை

எனினும் மூன்றாம் மாடியில் நடைபெற்ற மாநாட்டில்; ஒருநாளில் எட்டுத் தடவைகள் மேலேறி இறங்குவதில் பலர் சிரமத்தை எதிர் நோக்கியதை அவதானிக்க முடிந்தது.

### *3. மாநாட்டின் மூலமாக எழுந்த முக்கியமான எழுவினைகள் (ISSUES)*

1. அன்பியக் கூட்டங்களின் முக்கியத்துவம் உணரப் படாமை.
2. அருட் தந்தையர்களின் இல்லத்தரிசிப்பின் தேக்கநிலை
3. சமூக பிளவுகள், முரண்பாடுகள் என்பவை தீர்க்கப்படாத அல்லது தீர்க்க முனையாத தாமத நிலை
4. கலாசாரப் பிறழ்வுகளின் களநிலை சீரழிவுகள்
5. பொருளாதாரப் பின்னடைவுகளால் துயரப்படும் போர்ப்பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நிரந்தர தீர்வு காணப்படாமை
6. இறை மக்களின் ஆன்மீக வளர்ச்சியில் துறவிகளின் ஈடுபாட்டின் ஆரோக்கியமற்ற நிலை
7. சுயாதீன சபைகளின் ஊடுறுப்புக்கள்
8. பரப்பளவில் வியாபித்துள்ள மறை மாவட்டம்
9. வன்னியில் சிங்கள (கத்தோலிக்க, பௌத்த) மக்களின் திட்டமிடப்பட்ட ஆக்கிரமிப்பு
10. திருச்சபை சட்டங்களினதும், ஆலயங்களில் நிலவும் சம்பிரதாயங்களினதும் சடங்குகளினதும் மரபுக்களினதும் கடினமான தன்மை
11. இறை மக்களின் விசுவாச வாழ்வில் தொய்வு நிலை
12. சாதி பாகுபாடு, வர்ணப்பாகுபாடு மற்றும் பால் நிலைப்பாகுபாடு பற்றியவைக்கு தீர்வுகள் எட்டப்படாமை.

### *4. மாநாட்டின் நிறைவு*

இறுதி நாளில் மாநாட்டுக்கான நோக்கங்கள் சறுக்கல் நிலைமை அடையா வண்ணம் மிகவும் எச்சரிக்கையாக உடனடி நடைமுறைக்கான முன்மொழிகள் சிறப்பாக நோக்கப்பட்டுள்ளன. இதன் பிரேரிப்புகள் ஆயரின் சுற்று மடலின் மூலம் ஏனைய இறைமக்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்று தீர்மானித்தமை நன்று. வழிபடும் சமூகம், சாட்சிய வாழ்வு என்பவற்றுடன் குழும வாழ்வுக்கான முன்மொழிவுகளும் பொறுப்புக்களும் தீர்மானிக்கப்பட்டமை ஆரோக்கியமான விடயமாகும். ஆராதனைகளும் பக்தி முயற்சிகளும் பங்குகளில் புதுப்பிக்கப்பட்டு ஆன்மீக ஈடுபாட்டுடன் நடாத்தப்படல் வேண்டும். இருப்பினும் எய்தப்பட்ட இறுதித்தீர்மானங்கள் மேலும் பல குழுநிலை ஆய்வு கள் (Formal Discussion) முறைமையற்ற (Informal Discussion) நிலையில் ஆராயப்பட்டு ஆற்றப்பட வேண்டிய செயற்றிட்டங்கள், செயற்பாடுகள், மாற்றப்பட வேண்டிய விடயங்கள் என்பன தீர்மானிக்கப்படல் வேண்டும்.

இறுதியாக, சிந்திக்க... சுய விமர்சனம் செய்ய... மாற்றம் கொண்டுவர... இறுகிய நிலையை இயைபாக்க... புதுப்பித்தலுடன் ஆய்வு செய்து எமது களநிலையின் யதார்த்தங்களை உணர்ந்தவர்களாக மாற்றம் பெற்ற மனிதர்களாக கிறிஸ்துவில் புதிதாய் வாழ எம்மை தயார் செய்வோம் என்ற யாழ் மறை மாவட்ட மேதகு ஆயர் அவர்களின் கனவை அவரின் வழிநடத்துதலோடு பரிசுத்த ஆவியின் துணை கொண்டு, அன்னை மரியாளின் பரிந்துரையோடு விசுவாச வாழ்வில் எம்மைப் புதுப்பிக்க யாழ் மறைமாவட்டம் ஏனைய மறைமாவட்டங்களுக்கு முன்னோடியாக... மாதிரியாக எழுச்சி பெற வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்.

- நன்றி -

அருட்பணி ***அ.றொஹறான் பேர்ணாட்***
***இயக்குனர்,*** பொதுநிலையினர் ஆணைக்குழு -
திருகோணமலை மறைமாவட்டம்

**3ம் மாத நினைவு நாள்**

பிறப்பு 16 . 04 . 1955



இறப்பு 12 . 08 . 2016

**திருமதி. கிறிஸ்டீன் அன்ஜலா தருமசீலன்**
(இளைப்பாறிய ஆசிரியை)

"வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்கள்" (உரோ.14:8)

மாதங்கள் மூன்று ஆனாலும் உம்
நினைவுகள் எம்மை விட்டு நீங்கவில்லை
தாயே....
உயிர் உள்ளவரை உம்மை மறவோம்
தாயே...

பிரிவால் துயருறும்
கணவன், மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

336/232, பேஸ்லைன் வீதி
கட்டுவ, நீர்கொழும்பு.

Advt-113/16

(5ம் பக்.தொடர்ச்சி...)

## ஆயர் பெற்றக்கீனி .....

இறைமக்களைப் பொறுத்தளவில் அண்மைக்காலம் வரையில் இவர்களுடைய பங்குத்தந்தையராக இருந்து வந்த இந்த கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்களுடைய இதுபோன்ற செயற்பாடுகள் ஒரு குழப்பநிலையை உருவாக்கியது மட்டுமல்ல, மக்களுக்குப் பெரும் இடறலாகவுமிருந்தது. ஆயர் பெற்றக்கீனியைப் பொறுத்தளவில் தென்பகுதி அப்போஸ்தலிக்க முதல்வராகிய கேய்தானோ அந்தோனியோ ஆண்டகையின் மெத்தனப் போக்கினால் தான் இதுபோன்ற செயற்பாடுகள் சாத்தியமாகின்றன என்று கருதினார். இதன் விளைவாக இரு ஆயர்களுக்குமிடையிலான உறவில் பெரும் கீறல் விழுந்தது. உண்மையில் ஆயர் தமது சபைக்குருக்களைக் கட்டுப்படுத்துவதற்கோ, தீர்க்கமான ஒரு முடிவு எடுப்பதற்கோ முடியாதவராகப் பலவீனமான ஓர் ஆயராகவே விளங்கினார் எனலாம். பிராவி அடிகள்தான் துணிவுடன் விசுவாசப்பரப்புதல் சபைக்கு அரங்கேறிக் கொண்டிருக்கும் இடறல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கடுமையான நடவடிக்கையெடுக்கும்படி எழுதினார்.

இதற்கிடையில் பிராவி அடிகள் கேய்தானோ அந்தோனியோ ஆண்டகைக்கு வழிவரும் துணை ஆயராக நியமனம் பெற்றமையால் பிரச்சினை அப்போதைக்குத் தீர்ந்தது எனலாம். கிளர்ச்சி செய்து கொண்டிருந்த ஒரட்டோரியன் சபைக்குருக்கள் புதிதாக நியமனம் பெற்ற ஆயருக்குப்பணிவதற்கிணங்கினர். ஒருவேளை ஆயர் பெற்றக்கீனியவர்கள் தெற்கு அப்போஸ்தலிக்க முதல்வராகிய கேய்தானோ அந்தோனியோவுக்கு வழிவரும் துணை ஆயராக (Coadjutor Bishop) நியமனம் பெற்று வந்தால் தாம் அவருக்குக்கீழ் பணிபுரிய வேண்டிவருமென்ற அச்சம் கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்களுக்கு இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆயர் பெற்றக்கீனியவர்கள் துவக்கத்திலிருந்தே ஒரட்டோரியன் சபைக்குருக்களது வாழ்க்கைமுறையையும், வினைத்திறன் இல்லாத பணிகளையும் தனது கண்டனங்களால் குறைகூறி வந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடரும்.....

(5ம் பக்.தொடர்ச்சி...)

## உன்னை அன்பு செய்.....

திருப்பலியினூடாகப் பாவப்பரிகாரமும் நன்றியறிதலும் நிகழ்கின்றது. ஏனெனில் இறைவன் சிலுவையில் வெளிப்படுத்திய, எக்காலத்திற்கும் ஏற்கனவே மறைவாயிருந்த இரக்கத்தின் திட்டத்திற்கு நன்றி கூறக்கூடிய (திருக்கிண்ணத்தைக் கையிலேந்தி இறைபுகழ் கூறுதல்) ஒரேயொரு விடயம் உன்னத செபமாகிய திருப்பலியே ஆகும்.

இறைவன் எமது குற்றங்களுக்கேற்ப எம்மைத் தண்டிப்பவரல்ல. இறைவன் அன்பாக இருக்கிறார். (God is Love) என்பதைச் சிலர் இன்று பிழையாக விளங்கிக் கொள்கின்றனர். அன்பே கடவுள் (Love is God) என்று திரிபுபடுத்துகின்றனர். ஒருவர் மற்றவரை அன்பு செய்வதே போதும், இறைவனைப் பற்றிய அறிவோ, மறைபொருட்களின் வெளிப்பாடோ, திருவிவிலியமோ, திருச்சபையோ, திருவருட்சாதனங்களோ, திருப்புகழ்மாலையோ, தேவையில்லை என்கின்றனர். கடவுள் அன்பாக இருக்கிறார். (Spiritual Mysticism) என்பவர்களோடு நாம் மகிழலாம். ஆனால் அன்பே கடவுள் (Secular Mysticism) என்பவர்களோடு நாம் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் அன்னை தெரேசாவையும் அவிலா தெரேசாவையும் இயக்கியவர் நற்கருணை ஆண்டவர் தான். எனவே அன்பின் அருட்சாதனங்களாகவும், இறை இரக்கத்தின் வாய்க்கால்களாகவும் நற்செய்தியின் தூதுவர்களாகவும் நற்கருணையின் பிரசன்னங்களாகவும் வாழ்ந்து இறைவன் உன்னை மன்னித்து அன்பு செய்கின்றார் என்று அறிக்கையிடுவோம்.

## யார் நல்லவர்?

**யார** நல்லவர்? பெரியோரா, இளையோரா, சிறியோரா, யார் தான் நல்லவர் என்று ஆழ்மனதில் சிந்தித்து பாருங்கள், அதற்கு விளக்கம் அறிவீர்கள். அதாவது இறைவனில் இணைந்து அவருக்கு ஏற்ற வழியில் நடந்து செல்கின்ற அனைவரும் நல்லவர்கள்தான். ஆனால் நல்லவர்கள் என்று அழைக்கப்படுகின்ற சிலர் தமக்கே தெரியாமல் தவறுகள் செய்திருக்கக் கூடும். அதற்காக இறைவனிடம் இவர்கள் மன்னிப்பு கேட்டால் என்றும் இவர்கள் உயர்த்தப் பெறுவர். ஆனால் இந் நவீன காலகட்டத்தில் இறை தந்தை நல்லவர் மட்டில் மகிழ்ச்சியடைவதா, கெட்டவர் மட்டில் வேதனைப்படுவதா, சிந்தித்துப் பாருங்கள், நாம் எல்லோரும் எவ்வளவோ கீழ்த்தனமாகச் செல்கின்றோம். நாம் எல்லோரும் எம்மை படைத்தவர் சொல் கேட்காமல், தீய எண்ணங்கள், தீய பழக்கங்கள் இவ்வாறு தீமையானவையை மட்டும் சிந்திக்கின்ற சாத்தானின் தூண்டுதலுக் கேற்ப சிறியோர், இளையோர், பெரியோர் என எல்லோரும் தீமையான வற்றில் ஈடுபடுகின்றனர். கூடுதலாக இளையோர் சமூகத்திலும் சரி, குடும்பங்களிலும் சரி ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். அதாவது போதைவஸ்து, மதுபானம், விபசாரம் போன்ற செயற்பாடுகளால் அவர்களின் கனவுகள் சிதறடிக்கப்படுகின்றன. ஆகவே இவை அனைத்தையும் முற்று முழுதாக ஒழிக்க வேண்டும். எனவே இளையோருக்கும் சரி சிறியோருக்கும்சரி நல்ல நல்ல கருத்துக்களை அவர்களின் மனதில் ஆழப்படுத்தி அவர்களையும் இறை தந்தையின் நேரிய வழியில் நடத்திச் செல்வோம். ஆகவே! இறைவன் படைத்த அனைத்து மனிதர்களும் நல்லவர்கள் தான், சந்தர்ப்ப சூழ் நிலையால் மாறுகின்றனர். எனவே இவற்றுக்கெல்லாம் எதிர் நீச்சல் போட்டு நாமும் நல்லவர்கள் தான் என்று சமூகத்திற்கும், நாட்டிற்கும், உலகத்திற்கும் நிரூபிப்போம்.

கு. நிதர்சன்
புனித யாகப்பர் ஆலயம், இளவாலை.

# விண்ணக அரசின் வழிகாட்டி செபமாலை

ஐப்பசி மாதம் என்றவுடம் எம் மனதில் தோன்றுவது பத்திமா பதியின் மூன்று சிறுவருக்கு மாதா காட்சி கொடுத்த நிகழ்வு மற்றும் செபமாலை. செபமாலை என்பது இறை அன்னையின் பரிந்துரைச்செபம், பார்வையற்றோர், கல்வி அறிவு இல்லாதோரின் பைபிள். மனப்பாடமாகச் சொல்லும் மறைநூல்.

மனித இனத்திற்கு கடவுள் வழங்கிய ஒப்பற்ற கொடைதான் மாதா, இறைபற்றோடு செபமாலை செபிப்பவர்க்கு மாதாவின் சிறப்பான பாதுகாவலும் அருள் வளங்களும் வழங்குவதாக மாதாதாமே வாக்குறுதி தந்துள்ளார். அலகையின் ஏமாற்று வழிகளை எதிர்த்து நிற்க ஆற்றல் வாய்ந்ததுதான் செபமாலை. பற்றிமா பதியில் 1917 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13ந் திகதி ஆறாவது முறையாக அளித்த திருக்காட்சியின்போது "நான் செபமாலை அரசி, தினமும் செபமாலை சொல்லுங்கள்" என்று கூறினார். செபமாலை செபிக்கும் போது உண்மையில் நாம் மாதாவாயிலாக ஆண்டவர் இயேசுவிடம்தான் மன்றாடுகிறோம். அப்போது தாய் கேட்பதை மகன் ஏற்றுக்கொண்டு வழங்குகிறார்.

இயேசுவின் மீட்பு வரலாறு நிகழ்வுகள் 20 மறை பொருளைக் கொண்டு நாம் செபமாலையில் சிந்திக்கின்றோம். அவை மகிழ்ச்சி நிறை மறை பொருள், துயர மறைபொருள், மகிமை மறை பொருள், ஒளியின் மறைபொருள் ஆகும். மாதா பக்தி ஒருபோதும் எம்மைக் கைவிடாது. நம்மை வழிதவறிச் செல்ல விடாது.

1. செபமாலை நரகத்திற்கு எதிரான வல்லமைமிக்க கேடயம்
2. செபமாலை தீமையை அழித்து பாவத்தில் இருந்து மீட்கும்
3. செபமாலை நன்மை, அறம் மற்றும் புண்ணியங்களை வளரச் செய்யும்
4. செபமாலை நிலையான மீட்பிற்கு அடையாளம்

ஐப்பசிமாதம் மட்டுமல்ல எம் மாதமும் செபமாலை மாதந்தான்.

மரியதாஸ் விக்ரோறியா, யாழ்ப்பாணம்.




சமகால வாழ்க்கைக்கேற்ப புதுமைகள் புகுதலையும்
அல்லாத பழமைகள் அடுத்தடுத்து களைதலையும்
மடல்திறந்த இதயகமல மனந்திறந்த செபங்களையும்
விட்டுக்கொடுப்பினையும் அன்புப் பரப்பலையும்
முதியோரும் இளையோரும் சங்கைமிகு திருநிலையினரும்
இனிவாழ்வில் கடைப்பிடிப்போம் புதுவாழ்வில் தடம்பதிப்போம்

ஊதாரி மகன்போல அலைந்தழிந்து போனோர்கள்
தம்தவறு அறிந்துணர்ந்து எழுந்தோடி வரும்போது
எதிர்கொண்டு அரவணைத்து மனமகிழ்ந்த தந்தைபோல
திருந்திவரும் மக்களை நாம் தேடிச்சென்று ஏற்றுக்கொள்வோம்!
பராமரிக்கும் திருச்சபையாம் பணிஒடுக்கி திகழாது
உயிர்காக்கும் படகுகள்போல் மீட்டுவரல் நலமாமே!

மூபத்து ஆண்டுபோரின் வடுசுமந்த மக்களும்
உடலூன வலிசுமக்கும் மாற்றுத் திறனாளிகளும்
பெற்றோரற்ற பிள்ளைகளும் பிள்ளையிழந்த பெற்றோரும்
தலைவனில்லா காரணத்தால் பெண்தலைமை குடும்பங்களும்
வறியோரும் எளியோரும் வெளிவிளிம்பு கிறிஸ்தவரும்
மையம் வர உதவுதல் நம் தலையாய கடமைதானே!

ஜெ. ஜோய் மாதவன்.

# "புதிதாய் வாழ்வோம்"

## யாழ்.மறைமாவட்ட மேய்ப்புப் பணி மாநாடு 2016 ஒரு கண்ணோட்டம்

**S.M. வுளோறன்ஸ்**

***கண்ணோட்டத்தினுள் கண்பதிக்குமுன் என் நோக்கம்:***

இக் கட்டுரையின் வழியாக போரின் வடுக்களையும் இயற்கை அனர்த்த சிதைவுகளையும், அடக்குமுறைச் சூழலையும் கடந்து 22 வருடங்களின் பின்பு மீண்டும் யாழ் மறைமாவட்டம் ஒரு புதிய ஆயரின் தலைமைத் துவத்திலும், அவரது பரிந்துரைப்பிலும், சிந்தனை சிதறல்களிலும் எம் கிறிஸ்தவ வாழ்வை ஆன்மீகச் செழுமை வாய்ந்த புதிய பார்வையிலும், புதிய பாதையிலும் மாற்றிடவும், எம் ஆன்மீகப் பயணத்தை விசுவாசம் என்னும் பொறுப்புள்ள சாரதி வழியாக நகர்த்த எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியாகவே இம் மாநாட்டை நோக்க முடியும். எனவே ஏனைய அரசியல், பொருளாதார, விஞ்ஞான, சமூக அமைப்புக்கள் நடாத்தும் மாநாடுகள் போன்றல்லாது **"செயலற்ற விசுவாசம் உயிரற்றது"** என்ற தூய யாக்கோபுவின் கருத்துச் செறிந்த வார்த்தையை வீரமுரசாகக் கொண்டு, **"புதிதாய் வாழ்வோம்"** என்னும் தலைப்பினை தலைசீராவாக அணிந்து, யாழ் மறை மாவட்டத்தின் புதிய ஆயர் பேரருட் கலாநிதி. யஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் 29.09.2016 01.10.2016 வரை இறைமக்கள் பிரதிநிதிகள் ஒரு சமூகமாக இணைந்துவர மேய்ப்புப்பணி மாநாடு மூவொரு இறைவனின் பிரசன்னத்தில் ஆரம்பமாகியது.

மேய்ப்புப்பணி மாநாட்டிற்கான தலைமை உரையினை யாழ் மறை மாவட்டத் தலைமை மேய்ப்பன் பேரருட் கலாநிதி. யஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் ஆற்றுகையில் முதற்கண் இம் மாநாட்டிற்கு வருகை தந்த பிரதம அதிதி அவர்களையும் ஏனையோரையும் அகமும் முகமும் மலர வரவேற்று மேற்படி மாநாட்டின் நோக்கத்தினை தெளிவுபடுத்தினார். தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில், இம் மாநாட்டினை கூட்ட வேண்டும் என்ற நோக்கம் என் மனதில் உதிக்க காரணம், சமகாலத்தில் நாம் வெளிப்புற அலங் காரங்களிலும் ஆன்மீக ஆழப்படுத்தல் அற்ற வழிபாடுகளை மேற்கொள்ளும் திருச்சபையாகவே உள்ளோம். **'தேடிக் காப்பாற்றும் திருச்சபையாக இல்லை'** கிறிஸ்துவை போன்று அவரது சான்று பகர்தலை எம் மத்தியில் பிரதிபலிப் பதில்லை. எனவே நாம் இருக்கும் நிலை உணர்ந்து எமது ஆன்மீக வறட்சியை சீர்ப்படுத்த வேண்டும் என்பதே எனது முக்கியமான நோக்கமாகும்.

அடுத்து மாநாட்டின் முதல் நாள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்த திருகோணமலை மறைமாவட்ட புதிய ஆயர் அதிவணக்கத்துக்குரிய நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் தமது பிரதம உரையினை ஆற்றுகை யில் 'புதுப்பித்தல் பெந்தக்கோஸ்து அனுபவத்தினூடாக நம்பிக்கையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட வேண்டும்' என்னும் கருவினை உட்புகுத்தி, நாம் இறைமக்கள் குழுமம என்னும் தலைப்பில் கருத்துரைகளை முன்வைத்தார்.

புதுப்பித்தல் நம்பிக்கையின் அடிப் படையில் கட்டியெழுப்பப்பட வேண்டும். நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி. கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை. எபி:- 11 : 1 என்னும் இறைவார்த்தையினூடாகத் தெளிவு படுத்தினார்.

அத்துடன் பெந்தக்கோஸ்து அனுபவம் திருச்சபையில் எவரும் தடுக்கமுடியாத மாற்றம் நிறைந்த புதுவாழ்வை ஏற்படுத் தியது. அதன் அடித்தளத்தில்தான் ஆதிக்கிறிஸ்தவர்களும் நம்பிக்கையை தமது வாழ்வில் அனுபவித்தனர், போதித் தனர், பகிர்ந்து வாழ்ந்தனர், சாட்சிய மாகவே இறந்தனர். மேலும் சிறப்பாக அன்னை மரியாளும் எமது விசுவாச வாழ்விற்கு இடைநிலையாளராக விளங்கிய சந்தர்ப்பங்களையும் நாம் மறக்கமுடியாது.

அத்துடன் குருக்களுக்கான விசேட அறிவுரையாக, ஒவ்வொரு குருவும் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் போது, அதுவே தமது முதலும், கடைசியுமான திருப்பலி என நினைத்து ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்போது அவர்களுக்குள் ஓர் எழுச்சிமிகு புதுப்பித்தல் உருவாகும் எனவும் சுட்டிக்காட்டினார். ஆகவே புதுப்பித்தல் அவசியமானது. அவசர மானது. தேவையில் இருப்போரைக் கண்டுபிடிக்க, அவர்கள் இருக்கும் இடம் தேடிச் செல்ல வேண்டும். நிறைவான புதுப்பித்தல் வாழ்விற்கு நற்கருணைப் பிரசன்னத்தில் எம்மை மையப்படுத்தல் காத்திரமானது. எனது தனிப்பட்ட அனுபவத்திற்கும், குடும்ப, பங்கு, மறை மாவட்ட, திருச்சபை முழுவதற்குமான இறை அனுபவத்திற்கும் புதுப்பித்தல் அவசியமானது.

இதனைத் தொடர்ந்து மாநாட்டிற்கான அறிமுகவுரையை யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம் அவர்கள் இதற்காக மேற் கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களை கணினிக் காட்சிப்படுத்தல் ஊடாக சிறப் புடன் முன்வைத்தார். மாநாட்டின் மூன்று நாள் கருத்தாடல் அமர்வுகளுக் கான திசைவழிகாட்டியாக அருட்பணி ச.ம. செல்வரட்ணம் (அமதி) அவர்கள் செயற்பட்டார். அவர் புதுப்பித்தலின் நோக்கம் பற்றி தமது உரையில் குறிப்பிடுகையில்... **'எம்மை வெறுமை யாக்குவதே ஆன்மீகம் வெறுமையாக் கும் தன்மையில்லாமல் புதுப்பித்தல் இல்லை'.** என்ற இரத்தினச் சுருக்கமான வரைவிலக்கணத்தை முன்வைத்தார். தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில் எமது ஆன்மீகப்பயணத்தின் அடித்தளம் இயேசுவாக இருக்க வேண்டும். புதுப்பித் தலில், குறுகியகால, இடைக்கால, நீண்ட காலச் செயற்றிட்டப் பார்வை வேண்டும். ஒருவரோடு ஒருவர் உடன்பயணிக்க வேண்டும்.

அடுத்த இதழில்...

# உன்னை அன்பு செய்யும் இறைவன்



**அருட்பணி கு.யே. அன்ரனிபாலா**

இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டின் இறுதிப்பகுதியை அண்மித்துக் கொண்டிருக்கும் இவ்வேளை, தந்தை இறைவனின் இரக்கத்தின் முகமாக, வார்த்தையாகிய யேசுவும் மனமாகிய தூய ஆவியும் எம்மால் உணரப்படுகின் றார்கள். தொடக்கத்தில் இறைவன் உலகைப் படைத்த போது முடிவில்லாக் காலத்திற்கும் அசைவாடிக் கொண் டிருந்த தூய ஆவியார் இறை இரக்கத்தின் தொடக்க நிகழ்வாக முதல் வார்த்தை உச்சரிக்கப்படும் வரை செயல்பட வில்லை. ஒளி தோன்றுக என்று இறைவனின் வாயிலிருந்து யேசு என்னும் வார்த்தை வெளிப்பட்டபோது தான் தூய ஆவியின் செயற்பாடு தொடங்கியது.

இன்றைய உலகில் கோடிக்கணக் கான மனிதர்கள் பயணச் சீட்டுப் (Flight Tickets) பதிவு களைக் கைகளில் வைத்துக் கொண்டு நரகத்திற்கான நுழைவுச் (Visas) சீட்டுகளுக்காகக் காத்திருக்கின்றனர். பணம், புகழ், பாலி யல் மோகம் போன்ற சாத்தானின் புகை, இவ்வாறு காத்திருக்க வைக் கின்றது. சாத்தான் மட்டுமே எப்போதும் நரகத்தில் குந்தியிருக்க வேண்டும். எவரும் தப்பித்தவறியும் அங்கு போய் விடக் கூடாது என்று சித்தங்கொள் ளும் இறைவன், மனக் கடினத்துடன் உலகில் வாழும் பாவிகளை மனந்திருப்பவும், உத்த ரிக்கும் நிலையில் அந் தரிக்கும் ஆன்மாக் களை அங்கிருந்து மீட்டுக் கொள்ளவும், உன்னையும் என்னை யும் தனது அன்பின் நிமித்தமாகத் துன்புறும் படி அழைக்கின்றார்.

கிறிஸ்துவைத் தலை யாகக் கொண்ட மறை யுடலாகிய திருச்சபை யின் அங்கத்தவர்களாகிய நாம் ஒருவர் மற்றவருக்காகத் துன்புறுவது இன்றிய மையாததாகும். எனவே இறைவன் எல்லோரையும் குணப்படுத்துவதில்லை. ஏனெனில் குணமா கும் காலம் வரும் வரை பொறுமை, இறையன்பு, பிறரன்புடன் துன்புற ஒரு சிலரை அழைப்பதே உலகின் மேல் அவர் கொள்ளும் இரக்கமாகும்.

பணத்தின் மேல் பணம் சம்பாதிப் பதற்காக எத்தனையோ பண முதலை கள் பாவ வாழ்வின் சுகபோகத்தில் மயங்கித் தமது ஆன்மாவை இழந்து விடுகின்றனர். இறைவனுக்கு மகிமை கொடுக்க மறந்து தனிமனித ஆராத னைகளையே முதன்மைப்படுத்து கின்றனர். அதாவது, அரசியல், பொருளாதாரம், தொழில்நுட்பம், கல்வி, கலை போன்றவற்றினூடாகத் தனி மனிதர்களின் சாதனைகள் போற் றப்பட்டு விளம்பரப்படுத்தப்படுவதனால் அழிந்து போகும் மனிதன் மகிமைப் படுத்தப்பட்டு மனிதனே உலகின் தலைவனாகின்றான். இறைவன் மறக்கப்படுகின்றார்.

எனவே, தான் படைத்த உலகை மீட்க இறைவன் தனது ஒரேபேறான மகனையே எமது கையில் தந்துள்ளார். ஒவ்வொரு திருப்பலியிலும் அந்த மகனை நாம் கொன்று (பலியிட்டு) சாப்பிடும் (தனக்கு விருப்பமான ஒரேயொரு பலிப்பொருளாகிய மகனோடு சேர்த்து எம்மையும் ஏற்கும் இறைவன் அவரையே உண்ணத்தருகின்றார். அளவிற்கு எமது பாவங்கள் மிகுதியாக உள்ளன. மகனின் பாத்திரம் நிரம்பி வழிகின்றது என்று பாத்திமாவில் மரியன்னை சுட்டிக்காட்டிய பாவப் பெருக்கத்தின் காரணமாக, உலகின் ஒவ்வொரு மூலையிலும் சங்கிலித் தொடர் போல வசீகர வார்த்தை (மகன்) உச்சரிக்கப்படும் போது இறை (உள்ள) மனமாகிய தூய ஆவி செயற்பட்டு அர்ச்சிக்கின்றார்.

(3ம் பக்கம் பார்க்க....)

# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி



முன்னைய தொடர்ச்சி.....

அருட்பணி
S.V.B.மங்களராஜா

# ஆயர் பெற்றக்கீனி எதிர்கொண்ட சவால்கள்

இலங்கையில் திருப்பொழிவு செய்யப்பட்ட முதல் ஆயரும், முதலாவது ஐரோப்பிய ஆயராகவும் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க மாவட்டத்தின் முதல் ஆயராகவும் ஒறாசியோ பெற்றக்கீனி ஆண்டகையவர்கள் பதினொரு வருடாங்கள் (1846-1857) பணியாற்றினார். ஆரம்பத்திலிருந்தே இந்தப் பதினொரு வருடங்களும் இவருக்குச்சவால்கள் நிறைந்த காலமாகவேயிருந்தது. ஆயர் பெற்றக்கீனி வடக்கு (யாழ்ப்பாண) அப்போஸ்தலிக்க மாவட்டத்தில் ஏழு விதமான சவால்களை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. அவை:

**1. கோவா ஒரட்டோரியன் சபைக் குருக்களின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது.**

**2. கோவாப்பிரிவினை (Goan Schism) இது முதலாவது கார்ணியோடு தொடர்புள்ளது.**

**3. அமலமரித்தியாகிகள் சபையினருக்கும் அமலமரித்தியாகிகள் சபையிலில்லாதோருக்குமிடையில் ஏற்பட்ட போட்டிகளும் புரிந்துணர்வின்மையும்**

**4. வடக்கு (யாழ்ப்பாண) அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்கும் தெற்கு (கொழும்பு) அப்போஸ்தலிக்க மாவட்டத்திற்குமிடையேயிருந்த எல்லை பிரிப்புப் பிரச்சினை.**

**5. ஆயர் பெற்றக்கீனியிடம் ஒப்படைக்கப்பட்ட பாரிய நிலப்பரப்பிலுள்ள மக்களின் தேவைகளை நிறைவு செய்ய போதியளவு குருக்கள் இல்லாமை.**

**6. ஆயர் புனித யூஜின் டி மசனட் மற்றும் மறைபரப்பு சபை ஒரு அமலமரித்தியாகிகள் சபை குரு ஒருவரை வழிவரும் துணை ஆயராக நியமிக்க கொடுத்த அழுத்தம்.**

**7. அச்சகம் ஒன்றின் தேவை இன்னும் நிறைவு செய்யப்படாமை.**

**1. கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்களின் எதிர்ப்பு**

பாப்பரசர் 9ம் பத்திநாதர் (1846-1878) அவர்கள் 1848ம் ஆண்டு மே மாதம் வெளியிட்ட (Impensam Omnem) 'இம்பென்சாம் ஒம்னெம்' எனும் மடலில் கோவாப்பேராயர் இலங்கை மீது ஆட்சியுரிமை கொண்டிருக்காத காரணத்தால் இலங்கையில் உள்ள புரட்சிப்போக்கைக் கடைப்பிடித்து, கோவா பேராயருக்குப் பணிந்து நடந்து கொண்டிருந்த குருக்களையும், பொது நிலையினரையும் அவர்கள் செய்வது தவறு என்று எச்சரித்திருந்தார். இம்மடலில் ரோமையால் நியமிக்கப்பட்ட அப்போஸ்தலிக்க முதல் வருக்கு (Vicar Apostolic) தமது பணிவை வெளிப்படுத்தாதோர் புரட்சியாளர்களென்றும் அவர்கள் செய்வது தவறு என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இப்படியானவர்கள் பிரிவினை வாதிகள் என்று கருதப்பட்டு இவர்களுக்கெதிராகத் திருச்சபைச்சட்டத்தில் உள்ளபடி தடைகள் விதிக்கப்பட்டு அவை நடைமுறைப் படுத்தப்படலாம் என்றும் இம்மடல் சுட்டிக் காட்டியது.

இம்மடலில் வார்த்தைப்பிரயோகங்கள் கடுமையாக இல்லாவிடிலும் இதில் காணப்பட்ட அல்லது இடம்பெறத்தவறிய சில முக்கிய விடயங்களால் மேலும் மேலும் வாதப்பிரதிவாதங்கள் ஏற்படக் கூடிய வாய்ப்பிருந்தது. முதலாவதாக இம்மடல் இலங்கைத்தீவின் அப்போஸ்தலிக்க முதல்வராகிய கேய்த்தானோ அந்தோனியோ (Gaetano Antonio) ஆண்டகைக்கு என்று விலாசமிடப்பட்டிருந்தது. இதில் 1847ம் ஆண்டு யாழ்ப்பாணம் (வடக்கு) கொழும்பிலிருந்து பிரிக்கப்பட்ட அப்போஸ்தலிக்க நிர்வாகப் பிரிவு என்பது பற்றி எதுவும் குறிப்பிடப் படவில்லை. ஏற்கனவே ரோமைத் திருப்பீடத்தின் நடவடிக்கைகளால் திருப்தியடையாதிருந்த கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்கள், மற்றும் பிரிவினை வாதிகள் மட்டுமல்ல செமேரியா அடிகள் போன்ற ஐரோப்பிய குருக்கள் சிலர் முதலாக இந்த மடலின் உண்மைத் தன்மையைச் சந்தேகித்தனர். இம்மடலின் பின்னணியில் சிலர், ஆயர் பெற்றக்கீனி யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க மாவட்டத்தில் கொண்டிருந்த அதிகாரத்தை முதலாகக் கேள்விக்குரியதெனக்கருதினர். இம்மடல் கொழும்பில் உள்ள ஒருவரால் வரையப்பட்டுப்பின் ரோமையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அங்கு அனுப்பப்பட்டிருக்கலாம் என்றும் சிலர் கருதினர்: பின்னர் விசுவாசப்பரப்புதல் சபை (Congregation of Propaganda Fide) 1848ம் ஆண்டு டிசம்பரில் இலங்கைத்தீவு இரண்டு அப்போஸ்தலிக்க மாவட்டங்களாக (கொழும்பு – யாழ்ப்பாணம் அல்லது தெற்கு – வடக்கு) பிரிக்கப்பட்டமையிலும் ஆயர் பெற்றக்கீனி யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க மாவட்டத்திலும் கொண்டிருக்கும் அதிகாரத்திலும் எதுவித மாற்றமுமில்லையென்று தெளிவு படுத்தியது. அத்துடன் ஆயர் கேய்தானோ அந்தோனியோ இலங்கைத்தீவின் அப்போஸ்தலிக்க முதல்வராகவும், ஆயர் பெற்றக்கீனி அவர்கள் தனித்தியங்கும் (Independent) வடக்கு அப்போஸ்தலிக்க மாவட்டத்தின் பதில் முதல்வராகவும் உள்ளனர் என்று கூறியது.


எனினும் எந்தவிதமான தெளிவுபடுத்தல்களும் இம்மடல்பற்றிய வாதப் பிரதிவாதங்களைக்குறைத்தபாடில்லை. பிரிவினை வாதிகள் இந்தமடல் மட்டுமல்ல இதற்குமுன் 'பத்ரோவாதோ' பிரச்சினை பற்றி வெளியிடப்பட்ட மடல்களதும் உண்மைத்தன்மையும் கேள்விக்குரியதே என்று வாதிட்டனர். ஆயர் பெற்றக்கீனியுடன் ஏற்கெனவே அதிருப்தியில் இருந்துவந்த கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்கள் இலங்கை இரண்டு அப்போஸ்தலிக்க மாவட்டங்களாக (தெற்கு, வடக்கு) ப்பிரிக்கப்பட்டதையும் நிராகரித்ததுடன் பெற்றக்கீனி ஆண்டகையையும் ஓர் 'ஆக்கிரமிப்பாளர்' என்று வகைப்படுத்தினர். அவர்களது கருத்துப்படி பெற்றக்கீனியின் ஆட்சியதிகாரத்தை முடக்குவதற்கு மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் பாராட்டப்படக்கூடியதொன்றாகத் தென்பட்டது. கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்களின் கேள்விக்குரிய நடவடிக்கைகளால் குழப்பமடைந்திருந்த பொது நிலையினர் மத்தியில் தமது நம்பகத்தன்மையை எப்படியாவது நிலைநாட்ட வேண்டிய தேவை அவர்களுக்கிருந்தது. அதேவேளையில் பிராவி (Bravi) அடிகள் (இத்தாலியிலிருந்து வந்த ஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த இவர்) கேய்த்தானோ அந்தோனியோவுக்கு வழிவரும் துணை ஆயராகவும் (Coadjutor Bishop) பின்னர் தென்பகுதியின் முதலாவது ஐரோப்பிய ஆயராகவும் பொறுப்பேற்றவர். ஆயர் பெற்றக்கீனியுடன் ஒப்பிடும் போது இவர் மெதுமையான போக்கைக் கடைப்பிடித்துவந்தவர்), விசுவாசப்பரப்புதல் சபையின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக பெற்றக்கீனி ஆண்டகை 1847ம் ஆண்டு உரோமையிலிருந்து கொண்டுவந்த மடலுக்கும் உரோமையிலிருந்து வெளியான 'இம்பென்சாம் ஒம்னெம்' (Impensam Omnem) எனும் மடலுக்கும் இடையில் எதுவித முரண்பாடும் கிடையாது என்று கூறினார்.

மேற்குறிப்பிட்ட வாதப் பிரதிவாதங்கள் மத்தியில் கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்களால் மேலும் குழப்ப நிலைகள் தோற்றுவிக்கப்பட்டன. செவரினோ கொடீனோ (Zeferino Godinho) எனும் கோவா ஒரட்டோரியன் சபைக்குரு பெற்றகிகீனி ஆண்டகையின் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டமையால் அவரால் கல்பிட்டி எனும் முக்கியத்துவம் வாய்ந்த மறைத்தளத்திற்குப் பொறுப்பாக 1847ல் அனுப்பப்பட்டார். இவர் 1848ம் ஆண்டு ஆகஸ்டில் திருச்சபைச்சட்டப்படி ஆயர் பெற்றக்கீனியிடம் தமது மறைத்தள கணக்குவழக்குகளை சமர்ப்பிப்பதற்கு பதிலாக தலைவில்லு புனித அன்னாள் திருத்தல காணிக்கைப்பணம், நகைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு கொழும்புக்குச் சென்றுவிட்டார். உடனடியாக அந்நாட்களில் சிறந்த மறைப் பணியாளராக விளங்கிய இஸ்பானியரான சிஸ்டர்சியன் (Cistercian) சபையைச்சேர்ந்த ஒரூனா (Oruna) அடிகளாரைக் கல்பிட்டிக்கு ஆயர் பெற்றக்கீனி அனுப்பினார். அத்துடன் கொழும்பு (தெற்கு) அப்போஸ்தலிக்க முதல்வராயிருந்த கெய்தானோ அந்தோனியோ ஆண்டகைக்கும் கொடீனோ அடிகளுக்கு அடைக்கலம் கொடுத்தமையை கண்டித்து கடும்வார்த்தைகளில் ஒரு மடல் எழுதி அனுப்பினார். தொடர்ந்த நிகழ்வுகள், நிலைமையை இன்னும் மோசமாக்கின. பீற்றர் நொவோன்னா (Pieter Novonha) எனும் ஒரட்டோரியன் சபைக்குரு தலைவில் புனித அன்னாள் திருத்தலத்தைத்தானே கட்டியெழுப்பியதால் தனக்கு அதில் சிறப்புரிமை உண்டென்றும், அதனால் ஆலயத்திறவு கோல்களையும், காணிக்கைகளையும், உண்டியல்பணத்தையும் ஐரோப்பிய குருக்களுக்குப் பாரம் கொடுக்க வேண்டாமென்றும் ஆலயத்தைச்சேர்ந்த மக்களுக்குச் செய்தியனுப்பினார். இதே குருவானவர் இன்னும் சில ஒரட்டோரியன் சபைக்குருக்களின் தூண்டுதலால் தனது பணியாட்கள் சிலரை அனுப்பி திருத்தலக்காணிக்கைகளை எவருக்கும் தெரியாமல் எடுத்து வரவும் அனுப்பி வைத்தார். அத்துடன் ஆயர் பெற்றக்கீனியவர்களும், ஒரூனா அடிகளும் அடாத்தாக தங்களால் உரிமை கொண்டாடமுடியாத தலைவில் திருத்தலத்தை ஆக்கிரமித்துள்ளதாக சிவில் நீதிமன்றில் வழக்கொன்றையும் தொடுத்தார்

ஆயர் பெற்றக்கீனிக்கெதிராக ஒரட்டோரியன் சபைக்குருக்கள் செய்த கிளர்ச்சி இத்துடன் முடிவடையவில்லை. 1849ம் ஆண்டுத்துவக்கத்தில் பிரான்சிஸ்கோ ஜியோவான்னி (Francesco Giovanni) எனும் இன்னுமொரு ஒரட்டோரியன் சபைக்குரு ஆயர் பெற்றக்கீனியின் ஆளுகைக்குக் கீழ் இருந்த வடக்கின் பல்வேறு ஆலயங்களுக்கும் சென்று அங்குள்ள உண்டியல் பெட்டிகளில் இருந்து பணத்தை எடுப்பது, மக்களிடமிருந்து ஆலய நிலுவைக் கொடுப்பனவுகளைப் பெறுவது, திருவருட்சாதனங்களை நிறைவேற்றுவது (ஆயரின் முறையான பணிப்புரையின்றி) மற்றும் ஐரோப்பிய குருக்களுக்கெதிராகப் பேசுவதற்கு மறையுரைகளைப் பயன்படுத்துவது ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தார். ஆயர் பெற்றக்கீனிக்கும், விசுவாசப் பரப்புதல் சபைக்குமெதிராகக் கிளர்ந்தெழுமாறு இறைமக்களைத் தூண்டியும் விட்டார். இவற்றையெல்லாம் செய்தபின், சேர்த்த பணத்துடன் கொழும்பு சென்றார்.

(3ம் பக்கம் பார்க்க....)

## நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் உறுதிப்பூசுதல் வழங்கும் நிகழ்வு



கடந்த 23.10.2016 (ஞாயிறு) காலை 7.00 மணிக்கு புனித நீக்கிலார் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலியில் எமது ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அவர்களால் 118 இளையோருக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கும் நிகழ்வு நிறைவேற்றி வைக்கப்பட்டது.

இதில் மறையுரை வழங்கிய ஆயர் அவர்கள் உறுதிப்பூசுதல் பெறும் பிள்ளைகள் நீங்கள் தூய ஆவியாரை செபத்தோடும், பயபக்தியோடும், தகுந்த மனநிலையில் உங்களைத் தயார் படுத்திப் பெற்றுக்கொள்வதன் வழியாக இயேசுவுக்குச் சிறந்த சான்றுபகரும் மறையறிவிப்பாளர்களாக மாறுகின் றீர்கள். நீங்கள் வாழும் இடங்களில் மட்டுமல்ல இயேசுவை அறியாத, மறை போதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நாடு களில் பணியாற்றும் பணியாளர் களுக்காகச் செபிக்கவேண்டும். செபிப்ப தோடு மட்டும் நின்றுவிடாமல் உங்க ளுடைய வளங்களையும் பகிர்ந்து கொடுப்பதன் மூலம் இயேசுவுக்கு சாட்சிகளாக மாறவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## நெடுந்தீவுப் பங்கில் பக்திபூர்வமாக இடம்பெற்ற செபமாலைப்பேரணி





செபமாலை மாதத்தின் நிறைவை முன்னிட்டு செபமாலைப்பேரணி நிகழ்வு நெடுந்தீவு பங்குத்தளத் திருச்சபையில் பக்திபூர்வமாக 31.10.2016 அன்று இடம்பெற்றது.

புனித யுவானியார் ஆலயத்தி லிருந்து மாலை 05.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பேரணியானது பிரதான வீதியூடாக தூய பற்றிமா அன்னை ஆலயத்தை சென்றடைந்த துடன் நிகழ்வின் இறுதியில் திருப்பலி யும் அன்னையின் ஆசீரும் இடம்பெற்றது.

மெழுகுவர்த்திகளை கரங்களில் ஏந்தியவாறு சிறுவர்கள், இளைஞர் யுவதிகள் மற்றும் மாதாகூட்டத்தினர் ஒழுங்குபடுத்தப்பட்ட நிரையில் செல்ல அலங்கரிக்கப்பட்ட வாகன ஊர்தியில் வண்ண ஒளிவிளக்குகளுக்கு மத்தி யில் அன்னையின் திருச்சொரூபம் பவனியாக எடுத்துவரப்பட்டது.

பங்குத்தந்தை அன்ரனி ஜெயரஞ்சன் அடிகளாரின் தலைமையிலும் அமல மரித்தியாகிகளின் அருட்தந்தை றமேஸ் அடிகளாரின் நெறிப்படுத் தலிலும் செபமாலைப்பேரணி மற்றும் திருப்பலி என்பன இடம்பெற்றது.

மேற்படி செபமாலைப்பேரணியில் பெரும் எண்ணிக்கையிலான பங்கு மக்கள் கலந்துகொண்டதுடன் பங்கு மேய்புப்பணிச்சபையினர் பாடகர் குழாம் மற்றும் பங்கின் மாதா கூட்டத் தினர் நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

மேற்படி பேரணியை நடத்துவது தொடர்பில் மூன்றுநாட்கள் ஆயத்த வழிபாடுகளும் நற்கருணை ஆராத னையும் நடைபெற்று இறுதிநிகழ்வாக செபமாலைப்பேரணி முன்னெடுக்கப் பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

*___ நெடுந்தீவு ஜீவா*

## புனித பிரான்சிஸ் அசிசியின் திருவிழாத் திருப்பலி இளவாலை அசிசிபுரம் புனித அந்தோனியார் ஆலயத்தில் கொண்டாடப்பட்டது

ஐந்து காய வரம் பெற்ற புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருச்சொரூபம் இளவாலை அசிசிபுரம் எனும் இயற்கை வனப்பு மிக்க சிறிய கிராமத்திலுள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் அமைக்கப்பட்டு அவ்வூர் மக்களால் புனிதருக்கு வருடாவருடம் விழா எடுத்து வருவது மகிழ்விற்குரிய விடயமாகும்.

அவ்வகையில் இவ்வாண்டுக்கான திருநாள் ஆயத்த வழிபாடுகள் 06.10.2016 மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி 09.10.2016 காலை 6.30 திருநாள் திருப்பலியுடன் நிறைவு பெற்றது. அருட்பணி செல்வரட்ணம் அடிகளார் தலைமையில் அருட்பணி பிராயன் அடிகளாரும் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். முடிவில் திருச்சொரூபபவனி, திருச் சொரூப ஆசீரும் இடம்பெற்றன.

யாழ் பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையினர், புனித அசிசியார்சபை அருட்சகோதரன், இளவாலை புனித வளனார் விடுதி மாணவர் மற்றும் இளவாலை பங்கு மக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

*அ.மேரியம்மா -*
*பிரான்சிஸ்கன்சபை 3ம் சபை*

## பருத்துத்துறை மறைக்கோட்டத்தில் மரியாயின் சேனையினரால் புதிய பிரசீடியம் உருவாக்கம்



## புத்தளம் தலவில் புனித அன்னம்மாள் ஆலயத்தில் யாழ் மறைமாவட்ட மரியாயின் சேனை அலுவலகர்கள் பங்குபற்றிய வெளிவிழாவின் போது



## விண்ணக வாழ்வில்
## 5ம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் 07 . 10 . 1958



விண்ணில் 06 . 11 . 2011

### அமரர் அருட்பணி. அ. சகாயதாசன்

"ஆகவே நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் வழியாக நமக்கு இந்த வெற்றியைக் கொடுக்கும் கடவுளுக்கு நன்றி"

[I கொரிந்தியர் 15-57]

105. 3ம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.

Ad - 109/16

இவரது பிரிவால் துயருறும்
சகோதரர்கள்.

## மண்ணக வாழ்வின் 70 ஆண்டுகள்
## விண்ணக வாழ்வின் 10ம் ஆண்டு

அருட்சகோ.

### M. அசும்ரீனா A.C

பிறப்பு 14.11.1946 இறப்பு 16.11.2006

ஆண்டவருக்கு அஞ்சி
வாழ்வோரை, அவர்தம் தூதர்
சூழ்ந்து நின்று காத்திடுவர்.
(தி.பா. 34:7)



Ad - 108/16

உம்பிரிவால் துயருறும்
அருட்சகோதரி S. கொறற்றி A.C.

## திருத்தி
## வாசிக்கவும்

கடந்த (16.10.2016) இதழில் கொழும்புத் துறைப் பங்கு மல்லாவிப்பங்கிற்கு 12 இலட்சம் ரூபா உதவி என பிரசுரிக்கப்பட்ட செய்தியை மல்லாவி தோற்றாக்கண்டல் நல்லாயன் ஆலயத்திற்கு 1 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா உதவிவழங்கப்பட்டது என திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகின்றோம்.

எஸ். யேசுதாஸ்

## ஈரவிழிகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### அகஸ்ரின் பிரான்சிஸ்
(வவி)

அன்னையின் மடியில் 1952.08.22

ஆண்டவன் அடியில் 2015.11.23

"அவர் தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார்... ஆண்டவரை உம் புகலிடமாய் கொண்டீர் உன்னதரை உம் உறைவிடமாக்கிக் கொண்டீர்" [தி.பா.91:4-7]

அப்பா... அப்பா... என்று
அழுகின்றோம்! கதறுகின்றோம்!
அருகில் இல்லையே நீங்கள்
ஆண்டொன்று மறைந்துவிட்டதே!
அன்னை மரியாளின் பாதத்தடியில்
வாழ்கிறீர்கள் என்ற ஆழமான நம்பிக்கையால்
ஆறுதல் அடைகின்றோம் - உங்களை
அன்புடனே அர்ப்பணிக்கின்றோம் - எம் அன்புறவே!

மாரீசன்கூடல்
இளவாலை.

Advt-112/16

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் ஓராண்டு

தோற்றம் 18 . 09 . 1938



மறைவு 18 . 11 . 2015

### திருமதி
### மெற்றில்டா சோதிமலர் இராசசிங்கம்

அவனியில் அவதரித்த அன்புத்தாயே
அறிவதனை அழகுற கற்பித்தாய்
அடைக்கல அன்னையிடம் அசையாத அன்பு கொண்டாய்
அனைவரையும் அன்பு செய்து அரவணைத்தாய்
அன்பின் கொடைவள்ளலாய் கொடுத்து நின்றாய்
உற்றதுணையையும் அன்பு மகளையும்
உறவு கொண்ட மருமகனையும் - உம்
உள்ளம் கொண்ட பேரப்பிள்ளைகள் இருவரையும்
பிரிந்து சென்று ஓராண்டு ஆனதே
பிரிவு என்பது பாரினிலேதான் என எண்ணி
பரலோகத்தில் இணைந்திருக்க பரமனிடம் வேண்டுகின்றேன்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 19.11.2016 சனிக்கிழமை யாழ் புனித அடைக்கல அன்னை (O.L.R) ஆலயத்தில் காலை 07.15 மணிக்கும் மிருசுவில் புனித நீக்கொலர் ஆலயத்தில் நண்பகல் 11 மணிக்கும் இவரின் ஆன்ம சாந்திக்கான திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் கலந்துகொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இல.368/3B பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

Advt-110/16

அன்புக்கணவர்
மற்றும் மகள் மருமகன்
பேரப்பிள்ளைகள்.



.....

**இறக்கத்தான் பிறந்தோம் அது வரை இரக்கத்தோடு வாழ்வோம்**

.....

**வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல மற்றவர் மனதில் நீ வாழும் வரை**

.....

புனித அன்னைத்தெரேசா.

## நீங்காத நினைவலைகள்

1ஆம் ஆண்டு



பேதுருப்பிள்ளை
செபஸ்ரியாம்பிள்ளை
பிறப்பு :- 10.07.1922
இறப்பு :- 07.07.2015

7ஆம் ஆண்டு



செபஸ்ரியாம்பிள்ளை
றோசலீன்
29.05.1929
09.11.2009

8ம் மாதம்



செபஸ்ரியாம்பிள்ளை
அன்ரன்
07.09.1957
11.03.2016

ஆண்டவர் அளித்தார் ஆண்டவர்
எடுத்துக் கொண்டார் ஆண்டவரது
பெயர் போற்றப் பெறுக!

111, சென் பற்றிக்ரோட்,
யாழ்ப்பாணம்.

Advt-111/16

மலர் குடும்பம்.

## மரித்தோரை மறவோம்



வருடந்தோறும் கார்த்திகை மாதம் மரித்தோருக்காக செபிக்கின்ற காலமாகும். மரித்தோருக்காக வேண்டிக் கொள்ளுவது புனித மிகுந்த செயலாகும். இக்காலத்தில் இறந்த எமது பெற்றோர்கள், உடன்பிறப்புக்கள், உறவுகள், இறை பணியாற்றியவர்கள் இன்னும் யாருமே நினையாத ஆன்மாக்கள் அனைவருக்காகவும் வேண்டுக் கொள்ளுவோம்.

# கல்லறைத் திருநாள் - நவம்பர் 2ஆம் நாள்

## மரணமிலாப் பெருவாழ்வு



இறப்பைக் கொண்டாடும் ஓர் உன்னதமான நிகழ்வுதான் கல்லறைத் திருநாள். கல்லறைத் திருநாளன்று மழைபெய்யும் என்ற நம்பிக்கையும் நிலவிய காலம். கல்லறையில் சிலர் அழுது கொண்டிருப்பார்கள். சிலர் கல்லறையை அலங் கரித்துக் கொண்டிருப்பார்கள். உறவினர்கள் நிறையப்பேர் கூடிச் செபித்துக் கொண்டிருப் பார்கள். இவ்வாறு கல்லறைக்கு முன் இறந்தோரின் உறவினர்கள் நண்பர்கள் ஒன்றுகூடிச் செபிக் கும் நல்ல நடைமுறைக் கிறிஸ் தவத்திற்கு மட்டுமே சொந்த மானது. உத்தரிக்கும் இடத்தில் இருக்கும் ஆன்மாக்களை விண்ணகத்திற்கு அழைத்துச் செல்லும்உன்னதமான வழிபாடே கல்லறைத் திருநாள்.

மக்கள் அனைவரும் மரண மிலா வாழ்வை வாழத்தான் ஆசைப்படுகின்றார்கள். ஆனால் மக்கள் மனங்களில் தங்கி வாழ ஆசைப்படுவதில்லை.

வடலூர் வள்ளலார் எனும் இராமலிங்க சுவாமிகள் தன் அருட்பாவில் "புனைந்துரை யேன் பொய் புகலேன் சத்தியம் சொல்கின்றேன் மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்" (தி.பா.5576 )

நேர்மையோடும், நெறி யோடும் வாழ்ந்து மரித்தவர்கள் மரணத்திற்குப் பிறகும் வாழ் கின்றார்கள் இதுவே மரண மிலாப் பெருவாழ்வு. மாண்பு, அழியாமை ஆகியவற்றை நாடு வோர்க்கு மரணமிலா நிலை வாழ்வைக் கடவுள் அருளுவார் என்று விவிலியம் சொல்கின் றது. (உரோ 2:7)

சுமார் 70வது வருடங்களுக்கு முன்பு கல்லறைத் திருநாள் சோகம் நிறைந்த விழாவாகத் தான் இருந்தது. கறுப்பு உடையுடனும், தொப்பியுடனும் பங்குத் தந்தையர்கள் கல்லறை களை மந்தரிக்கும் பொழுது;

"இன்றைக்கோ நாளைக்கோ
கொல்லும் சாவு
உன்னையோ என்னை
யோ யாரறிவார்?
இங்கேயோ எங்கேயோ
வரும் சாவு
நன்மைக்கோ தீமைக்கோ
யாரறிவார்?
ஒருநாள் வரும் நிஜமே
நேரமே நீ அறியாய்
யார்தான் உதவிடுவார்
அய்யோ பயங்கரமே!"

பாடலைப் பாடுபவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் சாவுக்குள் நுழைந்து தப்பித்து வெளிவரு வது போலிருக்கும். இன்று நிலைமைமாறி உள்ளது. பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் "வற்றிப்போகாமல் மனசு எப்போதும் ஈரமாக இருக்கவே பிரியப்படுகின்றது - ஆனால் நம்மை கரைசேர்த் தவர்கள் காணாமல்போகும் போது, நம்மை வாழவைத்த வர்கள் வாழ்வை முடிக்கும் போது நெஞ்சிலே வளர்ச்சி குன்றி வறட்சியே பெருகுகிறது. இறந்தோர் தினத்தில் நமக்காக வாழ்ந்தவர்களின் பிரிவை நினைக்கும் போது நிச்சயம் உணர்ச்சிகளின் வலிகளை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. மிகச் சிறந்த சிந்தனை வாதி கார்ல் மார்க்சின் முக்கிய மான ஒரு சிந்தனை எதை இழந்து எதைப் பெறுகின் றோம்? ஆம் என்றுமே நிறை வான இயற்கை உலகிலே நாம் வெறுமையாகவே வந்து பிறந்தோம். பிறந்ததிலிருந்து இறப்புவரை நாம் எதையும் இழந்ததுமில்லை எதையும் பெற்றதுமில்லை! எனவே இழப் பதும் பெறுவதும், இறப்பதும், பிறப்பதும் இயற்கையின் நியதி - என்கின்றார்.

நம்மில் பலர் வாழாமலே இறக்கிறார்கள். சிலர் இறந்தும் வாழ்கின்றார்கள். எப்பொழு தென்றால், புலி அடித்துச் செத்தவர்களை விட கிலி பிடித்துச் செத்தவர்களே அதிகம் என்பதைப்போல எதற்கெடுத் தாலும் தேவையற்ற பயங்கள். தேவையற்றதின் மீதுள்ள கவலைகள். உறவுகளுக்குள் ளாக எழுகின்ற தேவையற்ற பேச்சுக்கள், இதனால் வரும் தேவையற்ற பிரச்சினைகள், பிளவுகள், தான் என்ற அகங் காரத்தினாலும், சுயநலத்தா லும், வன்முறைகள், கொலை வெறிகள், அத்துமீறல்கள், இயற்கை சீற்றங்கள் போன்ற தருணங்களில் உண்மை யாகவே வாழாமல், இறப்பினை, அழிவினை நாமே வரவழைத் துக் கொள்கின்றோம்.

ஆறிலும் சாவு, நூறிலும் சாவு எனவே வெந்ததைத் தின்று விதிவந்தால் சாவோம் என்கின்ற போக்கு நம்மில் உள்ள மிக மோசமான அழிவின் காரணி ஆகும்.

வாழ்கின்ற ஒவ்வொரு மணித் துளியும் நம்பிக்கையின் விதை களை விதைத்து, அன்புறவுச் சிறகுகளை அகிலத்தில் அகல விரித்துப் பறக்கும்போது... நிச்சயம் நமது வாழ்வு முழுமையாகிறது, நிறைவுபடுகிறது ஆனந்தமாகிறது.

"வெட்டுப்பட்ட மரத்தினிலே வேர்துளிர்க்கக் கண்டிடலாம். தீயில் அழிந்த காட்டினிலே சோலை ஒன்றை அமைத்திட லாம், பட்டுப்போன செடியும் கூட பனித்துளியில் முளைத்திடலாம் ஆனால் மாண்டுபோன மனித உடல் மீண்டும் வரக்கண்டதுண் டோ? மண்ணில் புதையுண்ட வனும் மனிதரூபம் எடுத்த துண்டோ?

*நெடுந்தீவு கலாபூஷணம்*
*புலவர் அரியநாயகம்.*

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழ் ஆயரின் ....

செயற்பாடுகளுக்கு ஆதரவளிக் குமாறும் , மறைமாவட்டத்தின் நிலத்தொடர்புகளை பேணு கின்ற பங்குகளின் கலாசார பண்பாட்டு அம்சங்களையும் , தனிமனித ஒழுக்கம் , அதனோடிணைந்த ஆளுமை விருத்தி மற்றும் குடும்ப மேம்பாடு மற்றும் இளைஞர் ஆளுமை என்பனவற்றை விருத்தி செய்வதில் கிறீஸ்தவ நிறுவனங்களான திருமறைக் கலாமன்றம், அகவொளி, கியூ டெக், இளைஞர் ஆணைக் குழு போன்றனவற்றின் பணியை சுட்டிக்காட்டி அவற்றின் பணி களை தமக்கும் பெற்றுத் தருமாறும் வேண்டி ஆண்ட கையிடம் பல்வேறு கோரிக் கைகள் முன்வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வின்போது உரைநிகழ்த்திய ஆயர் அவர்கள் தனது தியாக்கோன் நிலையின் போது அதாவது 1973ம் ஆண்டு நெடுந்தீவிற்கு வந்திருந்த தாகவும் 43 வருடங்களின் பின்னர் தற்போதுதான் வந்திருப் பதாகவும் நீண்ட கடற்பயணம் மற்றும் யுத்தகாலங்களை கடந் தும் நெடுந்தீவு துரித அபி விருத்தி கண்டிருப்பது தமக்கு மகிழ்சியளிப்பதாகவும் பங்கு மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை நடை முறைப் படுத்துவதற்கு தாம் விரைந்து செயற்படுவதாகவும் உறுதி யளித்திருந்தார்.

கச்சதீவு திருவிழாக்காலங் களில் அர்ப்பணிப்புடன் கூடிய முறையில் பல பணிகளை நெடுந்தீவு பங்குத்தந்தை மற்றும் பங்குமக்கள் ஆற்றி வருவதற்காகவும் தனது பாராட் டுக்களை தெரிவித்ததோடு இளம் குருவான அருட்பணி அன்ரனி ஜெயரஞ்சனின் பங்கு மேம்பாட்டுப் பணிகளைக் கண்டு வியப்பதாகவும் அவரின் ஆளுமைக்காக தொடர்ந்தும் செபிப்பதாகவும் தனது ஆதரவு களை நல்குவதாகவும் தெரி வித்தார்.

நெடுந்தீவிற்கான பயண மொன்றினை வருகின்ற வருடத தின் ஆரம்பப்பகுதிகளில் மேற்கொள்ளவும் இரண்டு நாட்கள் பங்கில் தங்கியிருக் கவும் பலதரப்பட்ட அமைப்புக் களுடனும் சந்திப்புக்களை மேற்கொள்ளவும் திட்டமிட்டிருப் பதாகவும் ஆயர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

*நெடுந்தீவு ஜீவா*

### புனித ஜோண் ...

கல்வி அமைச்சு, அவர்களும் கௌரவ விருந்தினராக பருத்தித் துறை மறைக்கோட்ட முதல் வரும் இப்பாடசாலையில் பழைய மாணவருமாகிய அருட்பணி A.J. யாவிஸ் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் 2016ம் ஆண்டு புலமைபபரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 169 மாணவர்கள் கௌரவிக்கப் பட்டார்கள்.

இவ்வாண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை யில் செல்வன் C.L.W. டில்சாந் பற்றிக் என்பவர் 191 புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் மூன் றாவது இடத்தையும் தமிழ் மொழிப் பாடசாலைகளுக்குள் முதலாவது இடத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### நம்பிக்கை...

இவ்வுலகிற்கு அதிகம் தேவைப் படும் மன்னிப்பையும், அமை தியையும் பறைசாற்றுவது முக்கியமென்றும் இரக்கத்தைப் பெறுவதற்கு நாம் கொண் டிருக்கும் தாகத்தை எந்த தொழில்நுட்பமும் தணிக்க முடியாதென்றும் இரக்க மென்ற உணர்வு, மனிதர்களுக்கு மட்டும் அல்லாமல் சுற்றியுள்ள படைப்பனைத்திற்கும் காட்டப்பட வேண்டும், என்று வலியுறுத் திய திருத்தந்தை வருங்கால தலை முறையினைக் குறித்து எவ்வித கரிசணையுமின்றி நாம் படைப்பை சீரழிப்பதை, எந்த மதமும் ஏற்றுக்கொள்ளாது என்றும் அனைத்து மதங்களும் நம்பிக்கையின் வாயில்களாக திகழட்டும் என்றும் கூறினார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2016ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.